# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## திருமணப் பதிவு (திருத்தம்)

**திருமணப் பதிவு கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன் அவர்களால் 2020, திசெம்பர் மாதம் 02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2020, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***18 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருமணப் பதிவு கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, திருமணப் பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்.*

**2**. 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, திருமணப் பதிவு கட்டளைச் சட்டம் என்ற விரிவுப்பெயர் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதில் "முஸ்லிம்களின் திருமணங்கள் தவிர்ந்த" என்ற சொற்களை நீக்கிவிடுவதன்மூலம் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் விரிவுப்பெயரை திருத்துதல்.*

**3**. 64 ஆம் பிரிவில், "திருமணம்" பற்றிய பொருள்கோடல் பின்வருமாறு பதிலீடு செய்யப்படுகிறது:- *முதன்மை சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவின் "திருமணத் திற்கான" பொருள் கோடலைப் பதிலீடு செய்தல்.*

> "திருமணம்" என்பதன் அர்த்தம் "18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதை அடைந்த ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே இந்த கட்டளைச்சட்டத்தின்கீழ் செய்துகொள்ளப்படும் ஏதாவது திருமணமாகும்".

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*